**உடதும்பர பிரதேச சபை – 2021**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

உடதும்பர பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த வருமானச் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 202 1 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உடதும்பர பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பனரின் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காயவு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 16 நானாவித கடன் கொடுத்தோருக்குரிய ரூபா 44,652 தொகை நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டின் முடிவுக் கணக்குகளை தயாரிக்கும் போது கடன்கொடுத்தோர் மீதிகள் உள்ளடக்கப்பட்டு சமர்ப்பிப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது | நிதிக்கூற்றுக்களை சரியாக தயாரிக்க் வேண்டும். |
| (ஆ) நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் காணப்படும் ரூபா 200,000 ஆன கட்டிடமொன்று அமைந்துள்ள காணி மற்றும் பெறுமதி குறிப்பிட்படாத 04 காணிகளின் பெறுமதி மதிப்பீடு செய்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது | நிலையான சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபைக்குச் சொந்தமாக காணப்பட்ட 3 காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பான விபரங்கள் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப் பட்டிருந்த போதும் அவற்றின் பெறுமதி கணக்கிடப்பட்டு காண்பிக்கப்பட்டிருக்கவில்லை | எதிர்காலத்தில் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது | நிலையான சொத்துக்களின் பெறுமதி கணக்கிடப்பட்டு நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

## 1.7. இணங்காமைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணத் தின் 104 (4) ஆம் பிரிவு | 2020 யூலை 18 ஆந் திகதி விபத்திட்குட் பட்ட சபைக்குரிய டிரம் டிரக் வண்டி தொடர்பாக பூரண அறிக்கையொன்றை அவ்விபத்து இடம்பெற்று நாள் முதல் மூன்ற மாதங்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் விபத்து இடம்பெற்று 06 மாதங்களுக்கு அண்மித்த காலம் கடந்து குறித்த பரிசோதனை குழு 2021 சனவரி 06 ஆந் திகதி நியமிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே கணக்காய்வு திகதியான 2022 சனவரி 03 ஆந் திகதி வரை ஓராண்டிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் குறிதத் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | குறித்த அறிக்கையை விரைவில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட் டிருந்தது. | நிதிப் பிரமாணத்தி ன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேணடும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,180,488 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,961,982 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வீதவரி | | |
| | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வீதவரி நிலுவை ரூபா. 525,589 ஆகக் காணப்பட்டதுடன் அதில் 1 | ரூபா 411,300 ஆன நிலுவை தொகை நடமாடும் சேவை நடாத்திப்பட்டு | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டு முதல் 5 ஆண்டுகள் மற்றும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரையான காலமொன்று கடந்துள்ள நிலுவை வீதவரி முறையே ரூபா. 223,556 மற்றும் ரூபா 30,213 ஆக இருந்தன. நிலுவை வீதவரி அறவீடு தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | |
| **(ஆ)** | **கடை வாடகை**<br>--------------------------- | | |
| | சபைக்குச் சொந்தமான 15 கடைகளுக்காக 2018 மே 22 ஆந் திகதிய அரச மதிப்பீட்டின் பிரகாரம் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த போதும் குறித்த கடை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய மொத்த கடை வாடகை ரூபா 2,444,655 ஆக இருந்ததுடன் மொத்த கடை வாடகையில் மீளாய்வாண்டிற்கான நிலுவை கடை வாடகை ரூபா 1,189,611 அதாவது மொத்த நிலுவைலயில் 48 சதவீதமான கூடிய பெறுமதியொன்றை எடுத்திருந்தது. | ரூபா 1,685,705 தொகையை அறவிடுவதற்காக வழக்கு தொடருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் எஞ்சிய நிலுவையை அறவிடுவதற்கு கடை உரிமையாளர்கள் அறிவுறுத்தப்பட்டிருந்தனர். | உடன்படிக்கையின் பிரகாரம் வாடகை அறவிடப்பட வேண்டும். |

**(இ) வேறு வருமானங்கள்**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியன்று நிலுவை நீர் கட்டண மீதி ரூபா 872,154 ஆக இருந்தது. அதில் உடதும்பர மாவட்ட வைத்தியசாலை யிலிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை நீர் கட்டணம் ரூபா 139,110 ஆக இருந்ததுடன் மொத்த நீர் கட்டண நிலுவையில் 1 ஆண்டு முதல் 5 ஆண்டு களுக்கு இடைப்பட்ட மற்றும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நிலுவை நீர் கட்டணங்கள் முறையே ரூபா 148,959 தொகை மற்றும் ரூபா 155,940 ஆக இருந்தது. | கட்டண அறவிடுவதற்காக அறிவித்தல் மேற் கொள்ளப்பட்டுள்ளதுடன் இணக்க சபையில் வழக்கு தொடர்பட்டுள்ளது. | உடன்படிக்கையின் பிரகாரம் நிலுவை கட்டணங்கள அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் போதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 132(ஓ) ஆம் பிரிவிற்கு இணங்காத வகையில் வெளிநிறுவனங்களின் நிதி ஏஏற்பாடுகளைக் பயன்படுத்தி நிறைவேற்ற வேண்டிய 04 நிர்மாண வேலைகளுக்காக பிரதேச சபை நிதியத்திலிருந்து ரூபா 1,807,305 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அதனை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மீள்நிரப்பட்டிருக்க வில்லை. | கௌரவ தலைவரின் ஆலோசணையின் பிரகாரம் அப்பணத்தை முற்பணக் கொடுப்பனவாக சபை நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் அத்தொகை மீள்நிரப்பி கிடைத்தவுடன் அம்முற்பணத்தை தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | செலுத்தப்பட்ட முற்பணத்தை அறவிட வேண்டும். |

## 3.2 விளைவற்ற மற்றும் குறை பயன்பாடுடைய சொத்துக்கள் பொறி மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) ரூபா. 2,124,170 ஆன விளைவற்றுக் காணப்பட்ட 4 வாகனங்கள் திருத்தம் செய்யப்பட்டு பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ அல்லது ஏலவிற்பனை செய்வதற்கோ நடவடிக்கை எடுக்காமல் சபைக்குரிய திஸ்ஸ அத்தநாயக்க மண்டப வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. | குறித்த வாகனங்களை திருத்தி பயன்பாட்டிற்கு எடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | குறித்த வாகனங்களை திருத்தம் செய்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ அல்லது திருத்தம் செய்ய முடியாமல் இருந்தால் கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) 2015 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் கிடைத்திருந்த ரூபா 30,010,323 ஆன 03 வாகனங்கள் கணக்காய்வு திகதி வரை 2022 மார்ச் 10 ஆந் திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்காமல் சபையின் மாநாட்டு மண்டப வளவிலும் கழிவுப்பொருள் தொகுதியிலும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. | குறித்த சாரதிகளை ஆட்சேர்ப்பு செய்த பிறகு அவ்வாகனங்களை பயன்பாட்டிற்கு எடுப்பதாக | குறித்த வாகனங்களை திருத்தம் செய்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ அல்லது திருத்தம் செய்ய முடியாமல் இருந்தால் கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |